செ.வெ.எண்.52 நாள். 20.2.2012

**மாண்புமிகு தமிழக முதலமைச்சா் தனிப்பிரிவு மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவா் திரு ஜெ. குமரகுருபரன்,இ.ஆ.ப. உத்திரவு**

நாமக்கல் மாவட்ட ஆட்சியா் அலுவலகத்தில் மக்கள் குறைதீா்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவா் திரு ஜெ. குமரகுருபரன்,இ.ஆ.ப. அவா்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குடிநீா் வசதி, சாலை வசதி, சாக்கடை வசதி, முதியோா் உதவித்தொகை. வீட்டுமனைப் பட்டா, போக்குவரத்து வசதி, கடனுதவி, வேலைவாய்ப்பு, மின்இணைப்பு வேண்டுதல், மற்றும் பிற உதவிகள் கேட்டு 465 மனுக்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலா்களுக்கு வழங்கி 20 தினங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ள உத்திரவிட்டாா். பொதுமக்களின் மனுக்கள் மீது காலதாமதம் செய்யாமல் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சா் தனிப்பிரிவிலிருந்து வரப்பெறுகின்ற மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் உத்திரவிட்டாா்.

இக்கூட்டத்தில் 11.12.2011 அன்று நாமக்கல் மாவட்டம் ஏளுா் கிராமத்தைச் சோ்ந்த தனசேகரன் என்பவா் சாலை விபத்தில் மரணமடைந்தாா். அவரது வாரிசுதாரரான அவரது மனைவி திருமதி சித்ரா என்பவருக்கு முதலமைச்சா் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1 லட்சத்திற்கான நிதியுதவியை மாவட்ட ஆட்சித்தலைவா் வழங்கினாா். மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் மூலம் 4 நபா்களுக்கு மூன்றுசக்கர வண்டியையும் மாவட்ட ஆட்சசித்தலைவா் வழங்கினாா். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலா் திருமதி ஆா். சீத்தாலட்சுமி, தனித்துணை ஆட்சியா் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திரு எம். பாலசுப்பிரமணியம், ஆகியோா் கலந்து கொண்டனா்.

---

வெளியீடு : செய்தி-மக்கள் தொடா்பு அலுவலா். நாமக்கல் மாவட்டம்.

**நாமக்கல் மாவட்டத்தில் நடைபெறும் பல்துறை பணிவிளக்க முகாம் மற்றும் கண்காட்சி அரங்கில் மக்கள் மகிழ்வுறும் வகையில் தினந்தோறும் கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன**

நாமக்கல் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி (தெற்கு) மைதானத்தில் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் பல்துறை பணிவிளக்க முகாம் மற்றும் கண்காட்சி 18.2.2012 முதல் 27.2.2012 வரை 10 நாட்கள் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கண்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் மகிழ்வுறும் வகையில் தினந்தோறும் கலைநிகழ்ச்சிகள். பட்டிமன்றங்கள். கரகம்மற்றும் காவடி போன்ற நாட்டுப்புற நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. 23.2.2012 மாலை 7.00 மணிக்கு நாமக்கல் அறிஞர்அண்ணா கலைக் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் திரு அரங்க பரமேஸ்வரன் அவர்களை நடுவராகக் கொண்டு சமுதாய முன்னேற்றத்திற்கு பெரிதும் துணை நிற்பவர்கள் **ஆண்களா! பெண்களா !!** என்ற தலைப்பிலான நகைச்சுவை பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது.

சேலம் கலை பண்பாட்டு மையத்தின் சார்பில் 26.02.2012 அன்று மாலை 6.00 மணியளவில் எலிமேடு கலைமகள் நாடக சபா வடிவேல் குழுவினர் வழங்கும் தெருக்கூத்து மற்றும் கிராமிய நிகழ்ச்சிகளும், 27.02.2012 அன்று மாலை நாமக்கல் பிரகாசம் குழுவினர் வழங்கும் கிராமிய கலைநிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெறவுள்ளது. மற்ற அனைத்து நாட்களிலும் மாவட்டத்திலுள்ள பள்ளிகள், கல்லூரி மாணவ மாணவிகள் பங்குபெறும் பரதநாட்டியம் மற்றும் கிராமிய கலைநிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெறவுள்ளது. எனவே மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் தினந்தோறும் கண்காட்சி அரங்கிற்கு வருகை தந்து கலைநிகழ்ச்சிகளை கண்டுகளிப்பதோடு சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை மகிழ்வுறும் வகையில் ராட்டினங்கள், சிறுவர் ரயில் போன்ற பொழுதுபோக்கு அம்சங்களிலும் பங்கேற்று கண்டு களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

---

வெளியீடு : செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர். நாமக்கல் மாவட்டம்.